# நம்மாழ்வார் அருளிச் செய்த
# திருவாய்மொழி
# எட்டாம் பத்து

## நான்காம் திருவாய்மொழி - வார்கடாவருவி
## எம்பெருமான் தனது வலிமையையும் பரிவர் பலர் இருப்பதையும் காட்ட, ஆழ்வார் திருச்செங்குன்றூரில் கண்டு மகிழ்தல்

** வார் கடா அருவி யானை மா மலையின் *
மருப்பிணைக் குவடு இறுத்து உருட்டி *
ஊர் கொள் திண் பாகன் உயிர் செகுத்து * அரங்கின்
மல்லரைக் கொன்று சூழ் பரண் மேல் **
போர் கடாவரசர் புறக்கிட * மாட
மீமிசைக் கஞ்சனைத் தகர்த்த *
சீர் கொள் சிற்றாயன் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாறு எங்கள் செல் சார்வே 1

எங்கள் செல் சார்வு யாமுடை அமுதம் *
இமையவர் அப்பன் என் அப்பன் *
பொங்கு மூவுலகும் படைத்து அளித்து அழிக்கும் *
பொருந்து மூவுருவன் எம் அருவன் **
செங்கயல் உகளும் தேம்பணை புடை சூழ் *
திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு
அங்கு அமர்கின்ற * ஆதியான் அல்லால் *
யாவர் மற்று என் அமர் துணையே? 2

என் அமர் பெருமான் இமையவர் பெருமான் *
இரு நிலம் இடந்த எம்பெருமான் *
முன்னை வல்வினைகள் முழுது உடன் மாள *
என்னை ஆள்கின்ற எம்பெருமான் **
தென் திசைக்கு அணி கொள் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாற்றங்கரை மீபால்
நின்ற எம்பெருமான் * அடி அல்லால் சரண்
நினைப்பிலும் * பிறிது இல்லை எனக்கே 3

பிறிது இல்லை எனக்குப் பெரிய மூவுலகும்
நிறையப் * பேர் உருவமாய் நிமிர்ந்த *
குறிய மாண் எம்மான் குரை கடல் கடைந்த *
கோல மாணிக்கம் என் அம்மான் **
செறி குலை வாழை கமுகு தெங்கணி சூழ் *
திருச்செங்குன்றூர்த் திருச்சிற்றாறு
அறிய * மெய்ம்மையே நின்ற எம்பெருமான் *
அடி இணை அல்லதோர் அரணே 4

அல்லதோர் அரணும் அவனில் வேறு இல்லை *
அது பொருள் ஆகிலும் * அவனை
அல்லது என் ஆவி அமர்ந்து அணைகில்லாது *
ஆதலால் அவன் உறைகின்ற **
நல்ல நான்மறையோர் வேள்வியுள் மடுத்த *
நறும் புகை விசும்பொளி மறைக்கும் *
நல்ல நீள் மாடத் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாறு எனக்கு நல் அரணே 5

எனக்கு நல் அரணை எனது ஆருயிரை *
இமையவர் தந்தை தாய் தன்னை *
தனக்கும் தன் தன்மை அறிவு அரியானைத் *
தடங்கடல் பள்ளி அம்மானை **
மனக் கொள் சீர் மூவாயிரவர் * வண்சிவனும்
அயனும் தானும் ஒப்பார் வாழ் *
கனக் கொள் திண் மாடத் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாறு அதனுள் கண்டேனே 6

திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாறு அதனுள்
கண்ட * அத்திருவடி என்றும் *
திருச் செய்ய கமலக் கண்ணும் செவ்வாயும் *
செவ்வடியும் செய்ய கையும் **
திருச் செய்ய கமல உந்தியும் செய்ய
கமலை மார்பும் * செய்ய உடையும் *
திருச் செய்ய முடியும் ஆரமும் படையும் *
திகழ என் சிந்தை உளானே 7

திகழ என் சிந்தையுள் இருந்தானைச் *
செழு நிலத் தேவர் நான்மறையோர் *
திசை கை கூப்பி ஏத்தும் * திருச்செங்குன்றூரில்
திருச்சிற்றாற்றங்கரையானை **
புகர் கொள் வானவர்கள் புகல் இடம் தன்னை *
அசுரர் வன்கையர் வெங்கூற்றை *
புகழும் ஆறு அறியேன் பொருந்து மூவுலகும் *
படைப்பொடு கெடுப்புக் காப்பவனே 8

படைப்பொடு கெடுப்புக் காப்பு அவன் * பிரம
பரம்பரன் சிவப்பிரான் அவனே *
இடைப்புக்கு ஓர் உருவும் ஒழிவு இல்லை அவனே *
புகழ்வு இல்லை யாவையும் தானே **
கொடைப் பெரும் புகழார் இனையர் தன்னானார் *
கூறிய இச்சையோடு ஒழுக்கம் *
நடைப் பலி இயற்கைத் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாறு அமர்ந்த நாதனே 9

அமர்ந்த நாதனை அவர் அவர் ஆகி *
அவர்க்கு அருள் அருளும் அம்மானை *
அமர்ந்த தண் பழனத் திருச்செங்குன்றூரில் *
திருச்சிற்றாற்றங்கரையானை **
அமர்ந்த சீர் மூவாயிரவர் வேதியர்கள் *
தம் பதி அவனி தேவர் வாழ்வு *
அமர்ந்த மாயோனை முக்கண் அம்மானை *
நான்முகனை அமர்ந்தேனே 10

** தேனை நன்பாலைக் கன்னலை அமுதைத் *
திருந்து உலகுண்ட அம்மானை *
வான நான்முகனை மலர்ந்த தண் கொப்பூழ் *
மலர் மிசைப் படைத்த மாயோனை **
கோனை வண்குருகூர் வண்சடகோபன் *
சொன்ன ஆயிரத்துள் இப்பத்தும் *
வானின் மீது ஏற்றி அருள் செய்து முடிக்கும் *
பிறவி மா மாயக் கூத்தினையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---